விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 033 வள்ளுவர் ஆண்டு 2056 தை 08 செவ்வாய்க்கிழமை (21.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= கட்டணம்

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது
### கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பில் விவாதம்

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று முதல் எதிர்வரும் 24ஆம் திகதி வரை கூடவுள்ளது.

இதன்போது அநுர அரசாங்கத்தின் கிளீன் ஸ்ரீ லங்காத் திட்டம் தொடர்பில் விவாதம் நடைபெறவுள்ளது.

அதன்படி முற்பகல் 11.30 முதல் மாலை 5.30 வரை "கிளீன் ஸ்ரீ லங்கா" திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெற்று, நாளை இரண்டாவது நாள் விவாதத்துக்காக ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப் 15

## 20 நாட்களில் 8 துப்பாக்கிச் சூடு
### 6 பேர் உயிரிழப்பு


(கொழும்பு)

இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்றுக் காலை வரையிலான 20 நாட்களில் 8 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் அதில் 6 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களுள் நால்வர் திட்டமிட்ட குற்றவாளிகள் எனவும் குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 5 பேர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் கலஹாப் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 15

# இந்தியாவுடன் பலமான உறவு கட்டியெழுப்பப்படும்
## ஜனாதிபதி அநுர குமார



(கொழும்பு)

இந்தியாவுடன் பலமான உறவை ஏற்படுத்தி எமது நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் யானை துரத்தியதில் மூவர் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் தெற்குப் பகுதியில் யானை துரத்தியதில் கண்ணிவெடி 15

## மன்னாரில் இளம் பெண் சடலமாக மீட்பு

(மன்னார்)

மன்னார் தோட்டக்காடு புகையிரதக்கடவையின் அருகில் இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் 15

## மகிந்தவை பயங்கரவாதிகளுக்கு பலிக்கடாவாக்க அரசு முயற்சி
### மொட்டு பெரமுன குற்றச்சாட்டு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை பயங்கரவாதிகளுக்குப் பலிக்கடாவாக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குற்றம் சுமத்தியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் விஜேராம வீட்டை அரசாங்கம் கையகப்படுத்தும் என ஜனாதிபதி தெரிவித்த கருத்திற்கு பதில் அளிக்கும் வகையில் இடம் 15

## 108 கிலோ கஞ்சாவுடன் குருநகரில் நால்வர் கைது



15

## 'குஷ்' போதையுடன் கட்டுநாயக்கவில் இருவர் கைது

(கொழும்பு)

6 கிலோ 630 கிராம் "குஷ்" போதைப்பொருளை நாட்டிற்குள் கொண்டு வந்த இரண்டு விமானப் பயணிகள், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத் 15

## மகிந்த வசிக்கும் வீட்டுக்கு ரூ.46 இலட்சம் வாடகை

(கொழும்பு)

மகிந்த வசிக்கும் வீட்டுக்கு மாதம் 46 இலட்சம் ரூபாய் வாடகை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பௌத்தலோக மாவத்தையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வசிக்கும் இல்லத் 15

## கன்ரர் வாகனச் சாரதிக்கு மயக்க மருந்து கொடுத்து
### 5 பவுண் நகைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து கன்ரர் வாகனச் சாரதியிடம் 5 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளது.

யாழ்.நகரப் பகுதியில் கன்ரர் ரக வாகனத்தில் வாடகை சேவையில் ஈடுபட்டு வரும் சாரதி ஒருவரின் நகைகளே நேற்று முன்தினம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம்தொடர்பில் தெரியவருவதாவது, 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ராஜபக்ஷக்களை வீழ்த்த முடியாது - நாமல்

(கொழும்பு)

ராஜபக்ஷக்களை அரசியலில் இருந்து ஒருபோதும் வீழ்த்த முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ராஜபக்ஷக்கள் கடந்த இரண்டு தேசிய தேர்தல்களிலும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றார்கள் என்பது மட்டுமே உண்மை.

ஆனால், அவர்களை அரசியலில் இருந்து ஒரு போதும் வீழ்த்த முடியாது. இதை அநுரவின் கட்சிக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றார். (ம-7)


# நெல்லியடியில் காணி விற்பனை

**காணியின் சிறப்பம்சங்கள்**



- 6 ¼ பரப்பு நீள்சதுரக்காணி
- தொடர்மாடி (Flats) கட்ட உகந்தது
- மூன்று பக்க வாகன போக்குவரத்து வசதி
- நான்கு பக்க சுற்றுமதில்
- மிகத்திறமான குடிநீர், வெட்டுக் கிணறும், குழாய்க் கிணறும் உள்ளது.
- மின்சார இணைப்பு வசதி.
- தங்குவதற்கு சிறுகுடில் (Cottage)
- மலசலகூட வசதி.
- சுற்றுப்புற மதிலுடன் காய்க்கும் நிலையில் தென்னம் கன்றுகள்.
- வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உகந்தது.

இடம் : நெல்லியடி பெற்றோல் நிலையத்தில் இருந்து விக்கினேஸ்வரா வீதியில் 75 m தூரத்தில் (Excellent கல்வி நிலையத்திற்கு அருகாமையில்)

தொடர்புகளுக்கு :

**076 416 9845**

(C-2092)


# மரண அறிவித்தல்

## கந்தையா இராசசுந்தரம் (ராசா)



தோற்றம் 03.04.1946 மறைவு 20.01.2025

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு மாவடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசசுந்தரம்(ராசா) அவர்கள் 20.01.2025 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - சொரூபராணி தம்பதியரின் அன்பு மருமகனும் ரவீந்திராதேவி (பவானி) அவர்களின் அன்புக் கணவரும் துரைசிங்கம் (ஓய்வுபெற்ற நில அளவையாளர் - கனடா), காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், நாகேஸ்வரி, இராயேஸ்வரி, லலிதாதேவி, தர்மபாலன், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நடேஸ்வரன், தேனுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் மஞ்சுளா, ஜெயகாந்தன் ஆகியோரின் மாமனாரும் தேனுஜா, ரகுராம், அபிஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் அக்ஷராவின் பூட்டனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21.01.2025 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 269 8696

(3081)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



மலர்வு 05 . 04 . 1960

உதிர்வு 22 . 12 . 2024

கடந்த 22.12.2024 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் கணபதி சிவஞானேஸ்வரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.01.2025) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் பகல் 11.00 மணியளவில் சபிண்டீகரண கிரியை நடைபெறும். நாளை (22.01.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தங்களை கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி.

தகவல் : குடும்பத்தினர்
சி.நிதுசன்(மகன்)
077 193 0450

(C-2091)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 07 . 12 . 1942

மறைவு 25 . 12 . 2024

கடந்த 25.12.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் கிருஷ்ணபிள்ளை இராசம்மா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 22.01.2025 புதன் கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 24.01.2025 வெள்ளிக் கிழமை நண்பகல் 11.00 மணியளவில் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் அன்னதான மண்டபத்திலும் நடைபெறவுள்ளதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

இல.116, சசி பவனம்,
[illegible] தெற்கு, மானிப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
077 677 9348

(C-2098)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி கணபதிப்பிள்ளை இராஜபூபதி



அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 15/37, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராஜபூபதி அவர்கள் 19.01.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பார்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் லோகிதமோகன், இளவேந்தன், சாந்தினி, சசிகரன், சுகந்தினி, அமுதினி, சிவாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் செல்வராஜா, தவராஜா, ஆனந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதானந்தராஜாவின் பாசமிகு சிறிய தாயாரும் இராஜேஸ்வரி, சந்திரப்பிரியா, சுகந்தினி, ஜெயானந்தன், புஸ்பராணி, சசிக்குமார், பகீரதன், ஜமுனா ஆகியோரின் அன்பு மாமியும் கனிமொழி, சங்கவி, அபிராம், ஆருதி, அனுஷ்கா, ஜெனிஸ்கா, சாகித்யன், விஜங்கா, அபிகேஷன், அகிம்சன், அஸ்விகன், வைஷ்ணவி, ஆரபி, நிலாணி, ஜசானி, பிரவீன், அருவின், பிரவியா, அஜீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2025) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15/37, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
077 118 5116

(3079)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்து அணியை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்து

## நைஜீரியா அசத்தல்

*(மலேசியா)*

மலேசியாவில் இடம்பெற்று வரும் ஜூனியர் மகளிர் ரி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் நியூசிலாந்தை வீழ்த்தி வரலாற்று வெற்றி பெற்றது நைஜீரியா அணி.

இதில் பலம்வாய்ந்த நியூசிலாந்து அணியை நைஜீரியா அணி எதிர்கொண்டது. மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 13 ஓவர்களாக குறைக்கப்படடது. இப்போட்டியில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பட்டிங் செய்த நைஜீரியா அணி 13 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 65 ரன்கள் அடித்தது.

இதனையடுத்து 66 ரன்கள் என்ற இலக்குடன் களம் இறங்கிய நியூசிலாந்து அணி 13 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 63 ரன்களை மட்டுமே எடுத்து 2 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

ஜூனியர் மகளிர் ரி-20 உலகக் கோப்பையில் நியூசிலாந்தை வீழ்த்தி நைஜீரியா அணி தனது முதல் வரலாற்று வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இதன்மூலம் சி.பிரிவில் முதலிடம் பிடித்து நைஜீரியா அணி அசத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# இந்திய அணியில் சூர்யகுமார் இடம்பெறாதமை அதிர்ச்சி அளிக்கிறது

## முன்னாள் கிரிக்கெட் வீரர் ரெய்னா




சம்பியன்ஸ் ட்ராபிக்கான இந்திய அணியில் சூர்யகுமார் இடம்பெறாதது குறித்துப் பேசிய முன்னாள் கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா "சூரிய குமார் யாதவ் ஒருநாள் உலகக் கோப்பைக்கான இந்திய அணியில் ஒரு அங்கமாக இருந்தார். ஆனால் 2025 சம்பியன்ஸ் ட்ராபிக்கான இந்திய அணியில் சூர்ய குமார் இல்லாதது அதிர்ச்சி அளிக்கிறது.

அவர் ஒரு ஓவருக்கு 9 ரன்கள் முடிக்கக்கூடிய ஒரு 360 டிகிரி வீரர். சூர்யா அணியில் இருந்திருந்தால் ஒரு X-பேக்டராக இருந்திருக்கும். மிடில் ஆர்டரில் ஒரு முக்கியமான வீரரை இந்தியா இழந்துள்ளது. அவர் ஒரு கேம் சேஞ்சர்" என்று தெரிவித்துள்ளார்.

ஐசிசி சம்பியன்ஸ் ட்ராபி கிரிக்கெட் தொடர் பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் பெப்ரவரி 19 ஆம் திகதி தொடங்கி மார்ச் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர் மற்றும் சம்பியன்ஸ் ட்ராபி தொடரில் ரோகித்சர்மா தலைமையிலான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)


# பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை

## பளை நகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழுங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 21.01.2025 தொடக்கம் 05.02.2025 பிற்பகல் 2 மணிவரை (அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 06.02.2025 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 06.02.2025 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளுக்கான மீள்கேள்வி அட்டவணை.**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| மேற்தரை | | | | |
| 1. | PMS-08 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 2. | PMS-11 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 3. | PMS-12 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்).
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 06.02.2025 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் பல கடைகளுக்கு விண்ணப்பிக்குமிடத்து சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு மிகப்பொருத்தமானது எனக் கருதும் சித்திரகுத்தகைதாரருக்கு, ஒருவருக்கு (இங்கு ஒருவர் என்பது ஒரு குடும்பத்தைக் குறிக்கும்) ஒருகடை மாத்திரமே சபையினால் வழங்கப்படும் என்பதுடன் ஏற்கனவே பிரதேச சபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
05. நீண்டகால குத்தகைக் கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்தவேண்டும்.
06. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உபவாடகைக்குக் கொடுக்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
07. குறித்த கடைகளில் சகிக்கமுடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்க முடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
08. கேள்விச் சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
09. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
10. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்தவேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபாரவரி, உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி. த.தர்சினி,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

(C-2093) 20.01.2025


# பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் விரைவில் இரத்து

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவை இரத்துச் செய்யும் சட்டமூலத்தை வெகுவிரைவில் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வருவேன் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

களுத்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது,

முன்னாள் அரசாங்கத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திய வாகனங்களை எதிர்வரும் மாதத்துக்குப் பின்னர் ஏலத்துக்கு விடுவேன். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த நிதியை திறைச்சேரிக்கு அனுப்புமாறு உரிய அமைச்சுகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன் என்றார். (ம-7)

# கன்ரர் வாகன...

யாழ். நகரில் கன்ரர் வாகன வாடகைத் தரிப்பிடத்திற்கு வந்த இருவர் கிளிநொச்சிப் பகுதியில் இருந்து பொருட்களை ஏற்றி வர வேண்டும் எனக் கூறி வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி கிளிநொச்சி நோக்கிப் பயணித்துள்ளனர்.

இடையில் பரந்தன் பகுதியில் வீதியோரமாக வாகனத்தை நிறுத்தக்கோரி அப்பகுதியில் உள்ள கடை ஒன்றில் குளிர்பானம் வாங்கி, சாரதிக்கு குடிப்பதற்கு வழங்கியுள்ளனர்.

அதனை குடித்தவர் சிறிது நேரத்தில் மயக்கமடைந்துள்ளார். வீதியோரம் நீண்ட நேரமாக வாகனத்தில் சாரதி அசைவின்றி காணப்பட்டதை அவதானித்தவர்கள் சாரதியின் அருகில் சென்று பார்த்த போது , சாரதி மயக்கத்தில் இருப்பதனை அறிந்து உடனடியாக அவரை மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னரே சாரதி சுய நினைவுக்கு வந்துள்ளார். அதன் பின்னரே தனது நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதை அறிந்து பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். (ம-7)


# வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(3078)

தொடர்பு:076 028 9835


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை குறைப்பு தொடர்பில் கலந்துரையாடல்

## ஜனாதிபதி வெளியிட்ட தகவல்

(கொழும்பு)

எரிபொருள் விலைகளைக் குறைப்பதற்கான சாத்தியக் கூறுகளை விரைவில் பரிசீலிக்க சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறை - கட்டுகுருந்தவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், எரிபொருள் விலைகளைக் குறைப்பதற்கு சிறிது காலம் எடுக்கும் என தெரிவித்த ஜனாதிபதி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கடனை திறைசேரி உள்வாங்கிய பிறகு எரிபொருளுக்கு ஒரு பாரிய வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதன்படி பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை திறைசேரி உள்வாங்கியுள்ளதாகவும், அந்தக் கடனை வசூலிப்பதற்காகவே எரிபொருளுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில், கடனை அடைக்கும் வரையில் எரிபொருளுக்கான வரியை நீக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், எரிபொருள் விலைகளைக் குறைப்பதற்காக கடன் செலுத்தும் காலத்தை விரைவில் நீட்டிப்பதற்கான சாத்தியக்கூறுகளை பரிசீலிக்க நிதி அமைச்சு, பெற்றோலிய கூட்டுத்தாபனம், இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியுடன் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

# முன்னாள் அமைச்சர் சொய்சாவுக்கு பிணை!



(கொழும்பு)


சட்டவிரோதமான முறையில் ஒன்று சேர்க்கப்பட்ட வாகனமொன்றை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான முன்னாள் அமைச்சர் விஜித் விஜேமுனி சொய்சா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலையாகியிருந்த நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6 மணி நேரத்திற்கும் மேலாக வாக்குமூலம் அளித்த பின்னர் வாலான ஊழல் தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ராஜபக்ஷக்களின் படுதோல்விக்கு ஊழல், மோசடியே காரணம்

## அமைச்சர் சுனில் குமார கமகே



(கொழும்பு)

ராஜபக்ஷக்களின் ஊழல், மோசடி ஆட்சியே அவர்களின் படுதோல்விக்குப் பிரதான காரணம் என்று இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த தேர்தல்களில் ராஜபக்ஷக்கள் வரலாறு காணாத வகையில் படுதோல்வியடைந்துள்ளனர். அவர்களை மக்கள் அடியோடு நிராகரித்து விட்டார்கள். ராஜபக்ஷக்களின் ஊழல், மோசடி ஆட்சியே அவர்களின் படுதோல்விக்குப் பிரதான காரணம்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்ஷக்கள் தேர்தல்களில் படுதோல்வியடைந்தாலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது. அவர்கள் இழைத்த குற்றங்களுக்கு தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் ஊழல், மோசடிகளுக்கு இடமேயில்லை. ஊழல், மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே எமது அரசின் பிரதான நோக்கம்." என அவர் தெரிவித்தார். (நி-8)

# அஸ்வெசும திட்டம் மக்கள் தொகை கணக்கெடுப்பு இன்று ஆரம்பம்

(கொழும்பு)

அஸ்வெசும திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்த, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பு இன்று ஆரம்பிக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

2ஆம் கட்டத்திற்காக நலன்புரிப் பலன்கள் வாரியம் கிட்டத்தட்ட 800,000 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.

அதன்படி, அந்த விண்ணப்பங்களில் இருந்து நலத்திட்ட உதவிகளைப் பெற தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில், வீடு வீடாகச் சென்று இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அஸ்வெசும திட்டத்தின் முதல் கட்டத்திற்காக நலன்புரி நன்மைகள் சபை 3.4 மில்லியன் விண்ணப்பங்களைப் பெற்றது.

அதில் சுமார் 1.8 மில்லியன் பேர் அஸ் வெசும நலன்புரி நன்மைகளைப் பெற தகுதியானவர்களாக தெரிவாகினர்.

இருப்பினும், நலன்புரி நன்மைகள் சபை தற்போது 1.72 மில்லியன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# இராசிபலன்

21.01.2025
தை 08, செவ்வாய்க்கிழமை
சப்தமி பிற்பகல் 12.36 மணிவரை

சித்திரை முன்னிரவு 11.32 மணிவரை
சுப நேரம் 11.05-12.35 மணி வரை
இராகு காலம் 3.35-5.05 மணிவரை

சந்திராஷ்டமம் - பூரட்டாதி, உத்தரட்டாதி

வளவன்




மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், உறவினர், நண்பர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள்.




உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.




பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.




தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வரலாம், தேவைகள் பூர்த்தியாகும், இல்லத்தில் சுப காரியங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.




சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.




தொழிலில் புதிய பொறுப்புகளை யோசித்து ஏற்பது நல்லது, பயணங்களால் பலனுண்டு, உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு




பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.




செலவிற்கேற்ற வருமானம் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.




நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும், பேச்சுக்களைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.




குடும்பத்தில் சிறு சிறு முறைப்பாடுகள் தோன்றி மறையும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் நடப்பது நல்லது.

யோசித்தால் மட்டும் போதாது துணிந்து செயற்படு வெற்றி உன் கையில்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் வாழும் பகுதியில் தமிழுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்

## அமைச்சர் சந்திரசேகரன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்.கலாசார மையத்தை திருவள்ளுவர் கலாசார மையமாக பெயர் மாற்றம் செய்தமை குற்றம் அல்ல. ஆனால் பெயர் மாற்றம் தொடர்பில் புத்திஜீவிகளின் கருத்துக்கள் பெறப்பட்டிருந்தால் ஆரோக்கியமாக இருந்திருக்கும் எனத் தேசிய மக்கள் சக்தியின் கடற்றொழில் அமைச்சரும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பலாலி வீதி கந்தர்மடப்பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் திறந்து வைக்கப்பட்ட யாழ்.கலாசார மையத்திற்கு திருவள்ளுவர் கலாசார மையம் என பெயர்மாற்றம்செய்யப்பட்டது. குறித்த நிகழ்வில் நானும் அதிதியாக கலந்து கொண்டவன் என்ற வகையில் பெயர்மாற்றம் தொடர்பில் திரை நீக்கத்தின் போது தான் அவதானித்தேன்.

திருவள்ளுவர் கலாசார மையம் எனப் பெயர் மாற்றியது குற்றம் அல்ல. யாழிற்கே உரித்தான பெயர்களான யாழ்.கலாசார மையம் அல்லது யாழ். பண்பாட்டு மையம் என்ற பெயர் சூட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

மேலும் பெயர் சூட்டும் நிகழ்வில் திருவள்ளுவர் கலாசார மையம் எனக் காட்சிப்படுத்தப்பட்ட இலத்திரனியல் திரையில் தமிழுக்கு மூன்றாவது இடம் வழங்கப்பட்டமை கவலை அளிக்கிறது.

தமிழ் மக்கள் வாழும் பகுதியில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். சில வேளை தெரியாமல் கூட சில தவறுகள் இடம்பெற்று இருக்கக் கூடும்.

குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் நான் இன்னும் கலந்துரையாடவில்லை. நிச்சயமாக அது தொடர்பில் கலந்துரையாடி இனிவரும் காலங்களில் தவறுகள் இடம்பெறா வண்ணம் செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (6-8)

# நாடகமும் அரங்கியலும் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்பாக தமது பெயர், விபரங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் மேலதிக விபரங்களுக்கு 077 669 2657, 077 639 3620 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# நெடுந்தாரகைக்கு விரைவில் புதிய நங்கூரம்



(யாழ்ப்பாணம்)

கடலோடு அடித்துச் செல்லப்பட்ட நெடுந்தாரகை படகின் நங்கூரம் இதுவரை கண்டு பிடிக்கப்படாத நிலையில் வீதி அபிவித்தி அதிகாரசபை புதிய நங்கூரக் கொள்வனவிற்கான நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட கடுமையான சீரற்ற காலநிலை காரணமாக நெடுந்தாரகைப் படகின் நங்கூரம் கடலோடு அடித்துச் செல்லப்பட்டது. அதைத் தேடும் பணிகள் இன்னும் நடைபெற்று வருகின்றன என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார். அந்த நங்கூரம் இன்னும் கண்டுபிடிக்கப் படாததால் புதிய நங்கூரத்தை விரைவாகக் கொள்வனவு செய்து சுமார் ஒரு மாதத்திற்குள் படகுச் சேவையை மீண்டும் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

தற்போதைய நெடுந்தாரகைப் படகு இயங்குமுறையில் இருந்தாலும் நங்கூரம் இல்லாததால் பயன்படுத்த முடியாமல் போயுள்ளது. இதனால் தொடர்ந்து போக்குவரத்து நெருக்கடிகளை சந்திக்க நேரிடுவதாக நெடுந்தீவுப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (6-8)



ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அறநெறிப் பாடசாலையின் பொங்கல் விழா நேற்று முன்தினம் முன்பள்ளி முன்றலில் முன்பள்ளித் தலைவர் இராதா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் இரா.ஜெயக்குமார், முன்பள்ளியின் போசகர் ம.மயூரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மேலும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# யாழ்.மாவட்ட விளையாட்டுப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் பரிசளிப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் அனைத்துப் போட்டிகளுக்குமான பதக்கப் பட்டியலின் அடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் 23 தங்கப் பதக்கங்கள், 11 வெள்ளிப் பதக்கங்கள், 6 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 40 பதக்கங்களை கைப்பற்றி முதலாமிடத்தையும் பருத்தித்துறை பிரதேச செயலகம் 14 தங்கப் பதக்கங்கள், 14 வெள்ளிப் பதக்கங்கள், 8 வெண் கலப் பதக்கங்கள் உட்பட 32 பதக்கங்களையும் கைப் பற்றி இரண்டாமிடத்தையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் 11 தங்கப் பதக்கங்கள், 11 வெள்ளிப் பதக்கங்கள், 13 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 35 பதக்கங்களையும் கைப்பற்றி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

அதேவேளை சிறந்த நன்னடத்தை அணியாக தெல்லிப்பழை பிரதேச செயலகம் 1279 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

## தேசிய மக்கள் சக்தி

# மக்கள் தொடர்பாடல் அலுவலகம் யாழில் திறப்பு



(யாழ்ப்பாணம்)

தேசிய மக்கள் சக்தியின் பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலகம் நேற்று திங்கட்கிழமை யாழ்.பலாலி வீதி, கந்தர்மடத்தில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கருணநாதன் இளங்குமரன், ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி மற்றும் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (6-8-33)

# தேய்பிறை அட்டமி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில், தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் தேய்பிறை அட்டமி உற்சவம் இன்று செவ்வாய்க் கிழமை (21.01.2025) மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் அபிஷேகம், வசந்தமண்டப பூஜை களைத் தொடர்ந்து நெய்விளக்கேற்றலும் சகஸ்ரநாம அர்ச்சனையும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (6-8)

# பழுதடைந்த அரச பேருந்து வீதியில் தவித்த பயணிகள்

## நுணாவிலில் சம்பவம்

(சாவகச்சேரி)

யாழில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற இ.போ. சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று நுணாவில் பகுதியில் பழுதடைந்த நிலையில் பயணிகளை மூன்று மணிநேரம் வீதியில் தவிக்கவிட்டமையால் ஆத்திரமடைந்த பயணிகள் ஏ-9 வீதியை மறித்துப் போராட முற்பட்டுள்ளனர். இதனால் சிறிது நேரம் அவ்விடத்தில் பதற்றம் நிலவியுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று முன்தினம் மாலை புறப்பட்ட பேருந்து 4.30 மணியளவில் நுணாவில் பகுதியை அண்மித்த வேளை பழுதடைந்து நின்றுவிட்டது.

இந்நிலையில் இரவு 7 மணி ஆகியும் பேருந்து திருத்தப்படவில்லை. அதே நேரம் பயணிகளுக்கான மிகுதிப் பணமும் வழங்கப்படவில்லை. மற்றும் மாற்று பேருந்து ஏற்பாடுகளும் செய்யப்படாத நிலையில் கோபமடைந்த பயணிகள் ஏ-9 வீதியை மறித்து போராட முற்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த சாவகச்சேரிப் பொலிஸார் பயணிகளுடைய மிகுதிப் பணத்தை நடத்துனரிடம் இருந்து பெற்றுக் கொடுத்திருந்த நிலையில் பயணிகள் அவ்விடத்தில் இருந்து நகர்ந்து சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (6-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறைவடைந்த வெங்காய உற்பத்தி இறக்குமதியாளர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூர் நுகர்வுக்காக இந்த ஆண்டு இரண்டு லட்சம் மெற்றிக் தொன் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என்று இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் பெரிய வெங்காயத்தின் வருடாந்திர நுகர்வு இருநூற்று எண்பதாயிரம் மெற்றிக் தொன் ஆகும். மாத நுகர்வு இருபத்தைந்தாயிரம் மெற்றிக் தொன். உள்ளூர் வெங்காய உற்பத்தி குறைந்துள்ளதால் இறக்குமதி அதிகரித்துள்ளது.

இந்த வருடம் குறைந்தது எட்டு மாதங்களுக்கு போதுமான பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என்றும் அதற்காக சுமார் 21 பில்லியன் ரூபாய் செலவிட வேண்டியிருக்கும் என்றும் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி-8)

# வாகன இறக்குமதிக்கான தடை பெப்ரவரி முதல் நீக்கம்

## மீண்டும் உறுதிப்படுத்தினார் ஜனாதிபதி



(கொழும்பு)

வாகன இறக்குமதிக்கான தடை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் நீக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

தற்போது அரசாங்கத்திற்குச் சொந்தமான சொகுசு வாகனங்களை ஏலம் விடுவது குறித்து நேற்று முன்தினம் பேசும்போது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதை அடுத்து ஆரம்ப காலகட்டத்தில் வாகன விலைகள் ஏற்ற இறக்கங்களை சந்திக்க வாய்ப்புள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

விலைகள் சீரானவுடன், அரச பொதுச் செலவினங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் அதிகப்படியானவற்றைக் குறைப்பதற்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக தற்போது அரச வாகனப் பிரிவில் உள்ள சொகுசு வாகனங்களை ஏலம் விட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (நி-8)

### குறை நிறைகளை அறிய

# மக்களோடு மக்களாக பயணித்த அமைச்சர்


(கொழும்பு)

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று திங்கட்கிழமை காலை மொரட்டுவையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி அலுவலக ரயிலில் மக்களோடு மக்களாகப் பயணித்துள்ளார்.

இந்தப் பயணத்தின் போது பயணிகள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து பிமல் ரத்நாயக்க பயணிகளுடன் உரையாடும் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இவர் ஊடகங்களுக்கு அறிவிக்காது ரயில் பயணத்தின்போது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கண்காணிக்க நேரடி கள ஆய்வை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது அடிக்கடி இடம்பெறும் ரயில் தாமதங்கள், மின் விசிறிகள் பழுது, ரயில்களில் ஏறுவதில் மாற்றுத் திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள், தண்டவாளங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் சுகாதார சீர்கேடு, பாதுகாப்பற்ற பாழடைந்த ரயிலைத் தொடர்ந்து பயன்படுத்தல் போன்ற பிரச்சினைகளை பொதுமக்களிடம் இருந்து கேட்டறிந்து கொண்டார். (நி-8)




## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>8 இல் செவ்<br>கி.பா: 52<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L,கமம்<br>எதிர்பார்ப்பு:தகுதியான பெண்<br>தொ.இ: B/15083 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 16 3/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: HND IT, B.Com, Bsc,Banker<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், பட்டதாரி<br>தொ.இ: G/10870 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>7 இல் செவ்<br>கி.பா: 58<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L,Driver(own<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15084 | பிறப்பு: 1990இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>7 இல் செவ்<br>கி.பா: 30<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA,DO<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/13551 |
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L, Drive (pvt company)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15085 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Bsc,Teacher<br>எதிர்பார்ப்பு:அரச வேலை, வெளிநாடு (லண்டன்,கனடா)<br>தொ.இ: G/13037 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# ஊழல் வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் தேவை

## மனோ எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஊழல் தொடர்பான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுவதை ஜனாதிபதி பரிசீலிக்க வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஊழலுக்கு எதிரான முயற்சிகளை வரவேற்கின்றேன்.

பொலிஸ், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, சட்டமா அதிபர் மற்றும் நீதித்துறை ஆகியவை குடியரசு ஜனநாயக நாட்டில் மக்கள் நம்பிக்கை வைக்கும் நிறுவனங்களாகும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கோப்புகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மீண்டும் திறந்து, இம்மாத இறுதியிலும் பெப்ரவரியிலும் வழக்குகளைத் தாக்கல் செய்யும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.

"இலஞ்ச ஆணைக்குழுவுக்கு (அதன் சட்ட அதிகாரங்களை வலுப்படுத்துதல் உட்பட), சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தில் உள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அதிக ஆதாரங்களை வழங்குவதன் மூலம் தேக்க நிலையை நீக்க வேண்டும்.

மேலும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கு அதிக ஆதாரங்களை வழங்க வேண்டும்.

அதேவேளை ஊழல் தொடர்பான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுவதையும் ஜனாதிபதி பரிசீலிக்க வேண்டும். இதனால் வழக்குகள் தினசரி அடிப்படையில் விசாரிக்கப்பட்டு முடிவுகளை நோக்கிச் செல்லும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

# தொடருந்து சேவைகள் வழமைக்கு

(கொழும்பு)

கடந்த 3 நாட்களாகத் தடைப்பட்டிருந்த தொடருந்து சேவைகள் நேற்று முதல் வழமைக்கு திரும்பி உள்ளதாக தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடருந்து இயக்குநர்களுக்கு இடம்பெற்ற பரீட்சை காரணமாக கடந்த 17 ஆம் திகதி முதல் பல தொடருந்து சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

இருப்பினும் நேற்று முன்தினம் பிற்பகல் எவ்வித தொடருந்து சேவையும் இரத்து செய்யப்படவில்லை என தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# 3 ஆம் உலகப் போரை தடுத்து நிறுத்துவேன்

## ட்ரம்ப் உறுதி



**(வோஷிங்டன்)**

**உக்ரைனில் நடைபெற்று வரும் போரை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவதுடன் மத்திய கிழக்கில் நீடிக்கும் குழப்பத்தை தீர்த்து வைப்பேன். அத்துடன் 3 ஆம் உலகப் போர் நிகழாமல் தடுப்பேன் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதியாகப் பதவி யேற்கவுள்ள நிலையில் நிகழ்வின் ஒரு பகுதியாக கேப்பிடல் ஒன் அரங்கில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நமது நாட்டை சரியான பாதையில் கட்டமைக்க வேண்டும். இன்று சூரியன் மறையும் நேரத்தில் நமது எல்லைகள் மீதான படையெடுப்பு நிறுத்தப்படும். நமது எல்லைகளை தொடர்ந்து பாதுகாப்பதுடன் அனைத்து சட்டவிரோத எல்லை அத்து மீறல்களுக்கும் முற்றுப்புள்ளி வைப்பேன்.

அமெரிக்க மண்ணில் செயற்படும் ஒவ்வொரு சட்டவிரோத அந்நியக் கும்பல் மற்றும் புலம்பெயர்ந்த குற்றவாளிகளையும் வெளியேற்றுவேன்.

மத்திய கிழக்கில் அமைதிக்கான முதல் படியாக நாம் போர் நிறுத்த ஒப்பந்தத்தை அடைந்துள்ளோம். கடந்த நவம்பரில் நாங்கள் பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியின் விளைவாகவே இந்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் இந்த காசா போரே நடந்திருக்காது.

கடந்த 4 ஆண்டுகளில் ஜோ பைடன் ஜனாதிபதியாக இருந்து சாதித்ததை விட அதிகாரத்தில் இல்லாமலேயே கடந்த 3 மாதத்தில் நாங்கள் அதிகமாக சாதித்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

# இடிபாடுகளிடையே வீடுகளை தேடும் காசா மக்கள்



(ஜெருசலேம்)

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முழுமையாக நடைமுறைக்கு வந்தது. முதற்கட்டமாக இஸ்ரேலிய பணய கைதிகள் மூவரை ஹமாஸும், பாலஸ்தீனிய கைதிகள் 90 பேரை இஸ்ரேலும் விடுவித்தது.

போர் நிறுத்தம் தொடங்கியுள்ள நிலையில் காசாவில் தாங்கள் கைவிட்டுச் சென்ற வீடுகளை நோக்கி மக்கள் மீண்டும் வரத் தொடங்கியுள்ளனர்.

15 மாதங்களாக வெளியேற்றப்பட்டு சொந்த நாட்டில் அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்த காசா மக்கள் கல்லாகவும் மண்ணாகவும் எஞ்சிய கட்டடங்களை கடந்து சிதிலங்களுக்கு ஊடாக தங்கள் வீடுகளின் எச்சங்களுக்குத் திரும்பத் தொடங்கினர்.

தெருக்களை சுத்தம் செய்து தங்கள் வாழ்வை மீண்டும் கட்டமைக்கும் முயற்சியை நம்பிக்கையுடன் தொடங்கியுள்ளனர். ஆனால் சேதங்கள் சரிசெய்யப்பட்டு காசாவில் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவது அவ்வளவு எளிதானது அல்ல என்பதே துரதிஷ்டவசமான உண்மை.

காசாவில் புனரமைப்பு பணிகளை நடத்தி முடிக்க 350 ஆண்டுகளுக்கு மேல் ஆகலாம் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

செயற்கைக்கோள் தரவுகளைப் பயன்படுத்தி ஐக்கிய நாடுகள் சபை கடந்த மாதம் வெளியிட்ட தரவின்படி காசாவில் உள்ள 69% கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளன.

சுமார் 245,000 வீடுகள் உட்பட பல கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று ஐ.நா மதிப்பிட்டுள்ளது. 100 இற்கும் மேற்பட்ட லொறிகள் முழுநேர வேலை செய்தாலும் இடிபாடுகளை அகற்ற 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகும் என்று கூறப்படுகிறது.

ஆனால் நம்பிக்கை மிகுந்த ஒரு பாலஸ்தீனியர் கூறுவதுபோல், "நாங்கள் இனியும் ஒரு கூடாரத்தில் இருக்கலாம். ஆனால் வித்தியாசம் என்னவென்றால் இரத்தக் களரி நின்றுவிடும். பயம் அகன்று விடும். நாங்கள் நிம்மதியாக தூங்குவோம்" இது ஒன்றே காசா மக்களுக்கு ஆறுதலாக அமைந்துள்ளது. (நி-8)

# 90 பா... விடு...

(ஜெருசலேம்)

காசா பகுதியில்... பார்க்கப்பட்ட போ... தினம் ஞாயிற்றுக்... வந்த நிலையில், அதிகாலை 90 ப... இஸ்ரேல் விடுவித்...



# பிக்பொஸ் 8... தெரிவு செய்யப்...



(சென்னை)

நடிகர் விஜய் சேதுபதி தொகுத்து வழங்கிய பிக்பொஸ்...

சீசன்... முன்... முடிவ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீனிய கைதிகளை
# டுவித்தது இஸ்ரேல்!

ம்)

தியில் நீண்டகாலமாக எதிர்
ட போர் நிறுத்தம் நேற்று முன்
ிற்றுக்கிழமை முதல் அமுலுக்கு
லயில், நேற்று திங்கட்கிழமை
90 பாலஸ்தீனிய கைதிகளை
டுவித்துள்ளது.





காசாவில் ஹமாஸ் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட மூன்று இஸ்ரேலிய பணயக்கைதிகள் இஸ்ரேலுக்குத் திரும்பிய சில மணிநேரங்களுக்குள் இஸ்ரேல் இவர்களை விடுவித்துள்ளது.

அந் நாட்டு நேரப்படி திங்கட்கிழமை அதிகாலை 1 மணியளவில் 90 பாலஸ்தீனிய கைதிகளை ஏற்றிக்கொண்டு செஞ்சிலுவைச் சங்கப் பேருந்துகள் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள ரமல்லாவை வந்தடைந்தன.

இஸ்ரேலியப் படைகள் கொண்டாட்டங்கள் அனுமதிக்கப்படாது என்று எச்சரித்த போதிலும் கைதிகள் மேற்குக் கரைக்கு திரும்பிய போது, ஏராளமான உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

விடுவிக்கப்பட்ட பாலஸ்தீனியர்களில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் ஜெருசலேமைச் சேர்ந்த 69 பெண்கள் மற்றும் 21 பதின்ம இளைஞர்கள் மற்றும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஆகியோர் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஸ் 8 வெற்றியாளராக
## செய்யப்பட்டார் முத்துக்குமரன்



சீசன்-8 நிகழ்ச்சி நேற்று முன்தினம் கோலாகலமாக முடிவடைந்தது.

கு
ஸ்

இதில், அதிக வாக்குகளைப் பெற்று மேடைப் பேச்சாளரான முத்துக்குமரன் வெற்றியாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

பிக்பொஸ் வீட்டில் முத்துக்குமரன் தன்னுடைய கருத்துக்களை தைரியமாக முன்வைத்து பேசும் விதமும் அதேநேரம் தவறு செய்து விட்டால், அதற்கு மன்னிப்பு கேட்ட விதமும் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருந்தது.

இதனால் முத்து நோமினேட் செய்யப்பட்ட போதும் மக்கள் அவருக்கு வாக்களித்து காப்பாற்றி வந்தனர்.

இதனால் 50 நாட்களை கடந்த பொழுதே முத்துதான் வெற்றியாளர் என்று பலரும் தீர்மானித்து விட்டனர். இதேவேளை சௌவுந்தர்யா 2 ஆவது இடத்தையும் விஜே விஷால் மூன்றாவது இடத்தையும் பவித்ரா ஜனனி 4 ஆவது இடத்தையும் ரயான் 5 ஆவது இடத்தையும் பிடித்தனர்.

இந்நிலையில் முத்துக்குமரனுக்கு பரிசாக 40 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் (இந்திய மதிப்பில்) வழங்கப்பட்டுள்ளதுடன் பிக்பொஸ் வீட்டில் 100 நாட்கள் இருந்த முத்துக்குமரனுக்கு சம்பளமாக 10 லட்சமும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

### உத்தரபிரதேச மகா கும்பமேளாவில்
## பாரிய தீ விபத்து



(டில்லி)

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நகரில் நேற்று மாலை நடைபெற்ற மகா கும்பமேளா நிகழ்வில் பாரிய தீ விபத்து ஏற்பட்டதால் புனித நகரத்தில் பரபரப்பு ஏற்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மகா கும்பமேளா நிகழ்வு நடைபெறும் கூடாரத்திற்குள் இருந்த எரிவாயு சிலிண்டர் வெடித்ததால் தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்தை அடுத்து பல தீயணைப்பு பிரிவின் வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து தீயை கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீவிபத்தினால் உண்டான சேத விபரங்கள் இன்னும் மதிப்பிடப்படவில்லை. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற வானிலையால்

## 16 ஆயிரத்து 930 பேர் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தகவல்

(கொழும்பு)

**நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை யால் 11 மாவட்டங்களில் 5,738 குடும்பங் களைச் சேர்ந்த மொத்தம் 16,930 பேர் பாதிக் கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**



இதனால் ஒருவர் உயிரிழந் ததுடன் மூன்று பேர் காயம டைந்துள்ளதாக அனர்த்த முகா மைத்துவ மத்திய நிலையம் நேற்றுக் காலை வெளியிட்ட அறிக் கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

71 குடும்பங்களைச் சேர்ந்த 239 பேர் பாதுகாப்பான இடங் களுக்கு மாற்றப்பட்டுள்ள னர்.

மொத்தம் 98 வீடுகள் பகுதி யளவில் சேதமடைந்துள்ளதுடன் ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள் ளது. (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 280 | 250 | 330-380 | 300 |
| உருளைக்கிழங்கு | 240 | 320 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 1000 | 1000 | 800-850 | 800 |
| தக்காளி | 350 | 350 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 220 | 200 | 200 |
| கோவா | 250 | 350 | 200 | 130 | 300 |
| கரட் | 300 | 300 | 350 | 300 | 400 |
| பூசணி | 120 | 100 | 150 | 80-100 | 200 |
| புடோல் | 150 | 100 | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 | 100-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 280 | 250 | 250 | 320 |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 500-550 | 500 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 150 | 100 | 200 |
| பயற்றங்காய் | 800 | 600 | 600 | 600 | 500 |
| லீக்ஸ் | 350 | 380 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 500 | 400 | 500 | 450 | 500 |
| கறிமிளகாய் | 800 | 600 | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 1000 | -- | 1600 |
| போஞ்சி | 400 | 450 | 100 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | 180 | 280 |
| கீரை – 1 பிடி | 150 | 80 | 150 | 50-80 | 200 |
| தேசிக்காய் | 300 | 300 | 150 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 240 | 180-200 | 150-200 | 180-250 |
| இராசவள்ளி | 500 | 800 | 500 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | 500 | 500 |
| முள்ளங்கி | 140 | 120 | 150 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 100 | 200 |

## இன்று ஒரு தகவல் 304



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# குருபக்தி

பக்தி மூன்று வகைப்படும் என்கிறார் ஒரு பெரியவர். (திருமுருக கிருபானந்த வாரியார்) தெய்வ பக்தி, அடியார் பக்தி, குருபக்தி. அடியார் பக்தியை விட தெய்வ பக்தியை விட குரு பக்தி தான் மிகவும் சிறந்தது என்கிறார் அவர். தெய்வத்திடம் செய்த பாவம் குருநாதரிடம் தீருமாம். குருநாதரிடம் செய்த பாவம் தெய்வத்திடம் தீராதாம்.

ஒரு காடு. அங்கே அயோததௌமியர் என்று ஒரு தபோதனர். அவர் பல மாணவர்களை ஒன்று சேர்த்து ஒரு குருகுலம் நடத்திக் கொண்டிருந்தார். பல திறன்பட்ட மாணவர்கள் அதிலே சேர்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். பாஞ்சால ராஜகுமாரன் ஒருவனும் அந்த குருகுலத்திலே சேர்ந்து படித்துக் கொண்டிருந்தான். அவன் பெயர் ஆருணி. பெரிய இடத்துப் பிள்ளையாக இருந்தாலும் படிப்பிலே மிகவும் கெட்டிக்காரனாக இருந்தான். அவன் தான் அங்கே முதல் மாணவன்.

ஒரு நாள் குருநாதர் அந்த அரசகுமாரனைக் கூப்பிட்டார்.

நம்ம குருகுலத்திற்குச் சொந்தமான வயலிலே தண்ணீர் பெருகி பயிரை அழிக்கிறது. அதனாலே நீ போய் மடையை அடைத்துவிட்டு வா என்றார். அந்த அரசகுமாரன் உடனே புறப்பட்டான்.

நான் பெரிய இடத்துப் பிள்ளையாகிற்றே... ராஜகுமாரனாகிற்றே... மிகவும் செல்வாக்குடன் வளர்ந்தவனாகிற்றே நான் போய் வயலிலே இறங்கி வேலைசெய்வதா? என்று எல்லாம் அவன் நினைக்கவில்லை.

குருநாதர் கட்டளையை நிறைவேற்ற வேண்டியது நம் கடமை என்று நினைத்தான்.

உடனே ஒரு மண்வெட்டியைத்தூக்கித் தோளிலே வைத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டான்.வயலுக்குப் போனான்.பார்த்தான். தண்ணீர் கரையை உடைத்துக் கொண்டு வயலுக்குள்ளே வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. இவன் மண்வெட்டியாலே களிமண்ணை புல்லுடன் சேர்த்து வெட்டி பற்றை பற்றையாக போட்டான். இருந்தாலும் மடையை அடைக்க முடியவில்லை.

தண்ணீர் வேகமாக வயலுக்குள்ளே போய்க் கொண்டே இருந்தது. போடுகிற பற்றையெல்லாம் கரைந்து கரைந்து போய்க் கொண்டிருந்தது. இருந்தாலும் இவன் தன்னுடைய முயற்சியைக் கைவிடவில்லை. வெட்டி வெட்டி போட்டுக் கொண்டே இருந்தான்.

காலையில் அங்கே போனவன் சாயந்தரம் வரைக்கும் இப்படியே செய்து கொண்டிருந்தான். உடம்பும் மனதும் மிகவும் சோர்ந்து போய்விட்டது. இருந்தாலும் குருநாதர் இட்ட கட்டளையை நிறைவேற்றாத நான் இன்னமும் இருக்க வேண்டுமா என்று யோசித்தான். என்ன செய்யலாம் என்று பார்த்தான்.

நம் குருநாதர் இட்ட பணிக்காக இந்த உடம்பையே தியாகம் செய்யலாம் என்று முடிவு செய்தான். தண்ணீர் பாய்கின்றதல்லவா? அதற்குக் குறுக்கே விழுந்து மடையை அடைத்துக் கொண்டு படுத்துவிட்டான் இது மற்றவர்க ளுக்குத் தெரியாது.

அன்றைக்கு இரவு ஒரு விளக்கு முன்னாலே உட்கார்ந்து குருநாதர் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். முதல் வரிசையிலே இருக்கக்கூடிய ராஜகுமாரனைக் காணவில்லை.

ஆருணி எங்கே? என்று ஏனைய மாணவர்களை விசாரித்தார்.

சுவாமி! அவன் காலையிலே வயலுக்கு மடையை அடைப்பதற்காகப் போனான். இன்னும் திரும்பி வரவில்லை. என்றான் ஒரு பையன்.

குருநாதர் உடனே ஒரு தீவெட்டியை எடுத்துக் கொண்டு மாணவர்கள் புடை சூழ வயலுக்குப் போனார். அங்கே போய்ப் பார்த்தால் ஆளைக் காணவில்லை.

ஆருணி! ஆருணி! என்று சத்தம் போட்டு கூப்பிட்டுப் பார்த்தார்.

நான் இங்கே இருக்கிறேன் குருநாதர் என்று காலுக்கு அடியிலே இருந்து சத்தம் கேட்டது.

குனிந்து பார்த்தால் அவன் மடையிலே படுத்திருக்கிறான். என்னப்பா இது என்றார். காலையிலே இருந்து இந்த மடையை அடைத்துப் பார்த்தேன் சுவாமி! முடியவில்லை. அதனாலே இப்படி குறுக்கே படுத்துவிட்டேன். என்னை தாண்டுவதற்குப் பயந்து தண்ணீரே தேங்கி நின்றுவிட்டது என்றான்.

அவனுடைய குரு பக்தியையும் அவனைத் தாண்டுவதற்கு அஞ்சி நிற்கின்ற தண்ணீர் தேக்கத்தையும் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போனார் களாம்.

ஆருணி! எழுந்து வா என்று கூப்பிட்டார் குருநாதர். அவன் தண்ணீரை பிளந்து கொண்டு எழுந்து வந்தான்.அதனாலே அவனுக்கு உத்தாலகன் என்று பேர் வந்ததாம். உத்தாலகன் என்றால் தண்ணீரைப் பிளந்தவன் என்று அர்த்தம்.

அந்த உத்தாலகன் மாதிரி இந்தக் காலத்து மாணவர்களுக்கும் குருபக்தி வேண்டும் என்று சொன்னேன். ஒரு பாடசாலையிலே உடனே நிறைய மாணவர்கள் எழுந்து நின்றார்கள்.

சேர் நீங்கள் எங்களை இன்னமும் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறோம். அன்றைக்காவது ஒருவன் அப்படி இருந்தான். இன்றைக்கு ஏகப்பட்ட உத்தாலகர்கள் இருக்கிறோம். எங்கள் வாத்தியார் கட்டளையிட்டால் இப்போதே அது மாதிரி வயலுக்குப் போய் மடையிலே குறுக்கே படுத்துக் கொள்ள இந்த வகுப்பிலே உள்ள அத்தனை பேரும் தயாராக இருக்கிறோம் என்றார்கள்.

அப்படியா என்று கேட்டேன் மிகவும் சந்தோசமாக. ஒருவன் மிகவும் அடக்கமாக எழுந்தான்.ஆமாம் சேர். வகுப்பிலே பாடம் கேட்பதை விட மடையிலே படுத்துக் கிடப்பது ஒன்றும் கஷ்டமான காரியமா இருக்காது சேர் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகள்
## யாழில் கவனயீர்ப்பு போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழில் நேற்று திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச நியமனத்தினை வழங்குமாறு வலியுறுத்தியே இப் போராட்டம் இடம்பெற்றது.

இப் போராட்டத்தில், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஏராளமான வேலையற்ற பட்டதாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.


யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக உள்ள உலக தமிழாராட்சி மாநாட்டு படுகொலை நினைவு தூபிக்கு முன்பாக ஆரம்பமான போராட்டமானது தொடர்ந்து யாழ்.மத்திய பேருந்து நிலைய வீதியூடாக பேரணியாக வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தை வந்தடைந்தது.

இதன்போது பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு வேலையற்ற பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர். (6-8-33)



இந்தியாவில் நடைபெற்ற 2025 தெற்காசிய மாஸ்டர் மெய்வல்லுநர் போட்டியில் ஒரு தங்கப்பதக்கம், 3 வெள்ளிப்பதக்கத்தினைப் பெற்று சாதனை படைத்த சிறிசெயானந்தபவன் அகிலத்திருநாயகிக்கு நேற்று முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் ஆகியோர் வாழ்த்திப் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

# 12 1/2 பவுண் நகைகளை களவெடுத்த குற்றச்சாட்டில்
## ❖ சந்தேக நபரொருவர் கைது
## ❖ 8 பவுண் நகைகள் மீட்பு



(தருமபுரம்)

இராமநாதன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாயவனூர் பகுதியில் உறவினர் வீட்டில் 12 1/2 பவுண் தங்க நகைகளை களவெடுத்த குற்றச்சாட்டில் சந்தேச நபரொருவர் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது கடந்த 5 ஆம் திகதி அந் நபர் உறவினர் வீட்டில் இல்லாத வேளையில் அங்கிருந்த 12 1/2 பவுண் தங்க நகைகளை களவெடுத்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக பொலிஸார் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த நபர் கைதாகினார்.

இதன்போது அந்நபரிடமிருந்து 8 பவுண் தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் களவாடப்பட்ட மிகுதி நகைகளை மீட்கும் நடவடிக்கையை பொலிஸார் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேக நபர் மற்றும் மீட்கப்பட்ட தடயப் பொருட்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய பொழுது 14 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (6-8-316)

# போலி ஆவணங்கள் மூலம் காணி விற்பனை
## வவு.ஒருவர் கைது

(குருமன்காடு)

அரச காணி ஒன்றுக்குப் போலி ஆவணங்கள் தயாரித்து 22 மில்லியன் ரூபாய்க்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பம்பைமடு பகுதியில் உள்ள அரச காணி ஒன்றினைப் போலி ஆவணங்கள் மூலம் 22 மில்லியன் ரூபாய்க்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த உத்தியோகத்தரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-8-250)



கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம் பகுதியில் அமைந்துள்ள நெற்களஞ்சியசாலையில் நேற்று இராணுவத்தினர் சிரமதானப் பணி நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்தனர். (படம்: தேவானந்தம்)

# முல்லை கடற்கரையில் இடம்பெற்ற பட்டத் திருவிழா



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கடற்கரையில் நேற்று முன்தினம் பட்டத் திருவிழா மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

பிரான்ஸ் நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் முல்லைத்தீவு - வட்டுவாகல் கிராமத்தைச்சேர்ந்த உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பட்டத்திருவிழாவில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், கரைதுறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் திருமதி.இராஜயோகினி ஜெயக்குமார், வட்டுவாகல் அறநெறி பாடசாலையின் முதல்வர் அப்புத்துரை செல்வரட்ணம் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துக் கொண்டனர்.

விருந்தினர்களால் சிறார்களிடம் பட்டங்கள் கையளிக்கப்பட்டு குறித்த பட்டத்திருவிழா வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிலையில் சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை இணைந்து இந்தப் பட்டம்விடும் திருவிழாவில் பங்கேற்றிருந்தனர். இதன் போது முல்லைத் தீவு கடற்கரையெங்கும் அழகிய வண்ணப் பட்டங்கள் வானை அலங்கரித்த நிலையில் இதனைப் பார்வையிடுவதற்காக பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)



# பாடசாலைக்கு வந்த சீருடைத் துணிகள்



(தருமபுரம்)

சீன அரசாங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட சீருடைத்துணிகள், கிளிநொச்சி பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென கிளிநொச்சியிலுள்ள நான்கு கோட்டங்களுக்கும் கொண்டு வரப்பட்டன.

இந்நிலையில் சீருடைத் துணிகள் நேற்று பாடசாலை அதிபர்களிடம் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 685





"அதனாலேதான் நானும் கவலைப்படுகிறேன். வானதி தேவிக்கு இந்த ஆபத்து வந்தது இளைய பிராட்டிக்குத் தெரியாமல் இருக்கலாம் அல்லவா?" இன்றைக்குத் தெரியா விட்டால் நாளைக்குத் தெரிந்து விடுகிறது.

நாளைக்குத் தெரிந்து என்ன பயன்? காலாமுகர்கள் அந்தக் கன்னிப் பெண்ணை இன்றிரவு பலி கொடுத்து விட்டால்.

வானதியைக் காலாமுகர்கள் தாக்கிப் பிடித்துக் கொண்டு போனதாகவா சொல்லுகிறாய்? அப்படித்தான் எனக்குத் தோன்றியது. வானதியின் தோழியும் அப்படித்தான் என்னிடம் கூறினாள்.

அது உண்மையானால், நீ கொஞ்சம் கூடக் கவலைப்பட வேண்டியதில்லை. கொடும்பாளூர் வம்சத்தார் காளாமுகத்தைச் சேர்ந்தவர்கள். வானதி தேவி கொடும்பாளூர்ப் பெண் என்று தெரிந்தால் அவளுக்குக் காலாமுகர்கள் இராஜோபசாரம் செய்வார்கள்! ஓகோ! இது எனக்குத் தெரியாமல் போயிற்றே?

"ஆகையால்தான் காலாமுகர்கள் மதுராந்தகத் தேவருக்கு எதிராக இருக்கிறார்கள்" இந்த மண்டை ஓட்டுச் சாமியார்கள் எதிராக இருந்தால் என்ன வந்துவிடப் போகிறது?

உனக்குத் தெரியாது. இந்த நாட்டின் மிகப் பெரிய குடும்பங்கள் காலாமுகத்தைச் சேர்ந்தவை. சைன்யத்திலும் அத்தகைய பலர் இருக்கிறார்கள் அதனாலேயே பழுவேட்டரையர் இன்றைக்கு இந்த ஏற்பாடு செய்திருந்தார். மதுராந்தகருக்குக் காலாமுகர்களின் ஆதரவைத் தேட முயன்றார். அது ஒரு குதிரை செய்த கோளாறினால் பலிக்காமற் போயிற்று. நீ புறப்பட்டு என்னுடன் வருகிறாயா அல்லது நான் கிளம்பட்டுமா?

வந்தியத்தேவன் வேண்டா வெறுப்பாக எழுந்து குதிரையையும் கையில் பிடித்துக் கொண்டான். அடர்ந்த காடுகளின் ஊடே ஆள் நுழையக் கூடிய வழியைக் கண்டுபிடித்து அவர்கள் வெளியே வந்தார்கள். "அதோ பார்!" என்று ஆழ்வார்க்கடியான் வானத்தைச் சுட்டிக் காட்டினான்.

முன் எப்போதையும் விடத் தூமகேதுவின் வால் நீண்டு வானத்தின் ஒரு பாதி முழுவதிலும் வியாபித்திருப்பதை வந்தியத்தேவன் பார்த்தான். குளிர்ந்த வாடைக்காற்று வீசிற்று. வந்தியத்தேவனுடைய உடம்பு சிலிர்த்தது. தூரத்தில் கிராமத்து நாய் ஒன்று தீனமான சோகக் குரலில் அழுதது.

### 38 ஆம் அத்தியாயம்
### வானதிக்கு நேர்ந்தது


சூரியன் மறைந்து நாலு திக்கிலும் இருள் சூழ்ந்து வந்த நேரத்தில், வானதி குடந்தை திருவாரூர் சாலையில் பல்லக்கில் போய் கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளம் குழம்பியிருந்தது. நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்குப் போக வேண்டும் என்றும், அங்கே காய்ச்சல் வந்து படுத்திருக்கும் இளவரசருக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்றும் அவள் மனம் துடித்தது. ஆனால் அது எப்படி சாத்தியமாகும்? புத்த பிக்குக்களின் விஹாரத்துக்குள் தன்னை அனுமதிப்பார்களா, அங்கே இளவரசரைத் தான் பார்க்க இயலுமா, பார்த்தாலும் பணிவிடை செய்ய முடியுமா என்பதையெல்லாம் எண்ணியபோது ஒரே மலைப்பாயிருந்தது. நாகைப்பட்டினத்துக்குத் தனியாகப் பிரயாணம் செய்ய வேண்டியிருப்பதை எண்ணிய போது அதைரியம் உண்டாயிற்று. அதைரியத்தைப் போக்கி மனதில் உறுதி உண்டுபண்ணிக் கொள்ள முயன்றாள். உலகில் பெரிய காரியம் எது தான் எளிதில் சாத்தியமாகும்? ஒவ்வொருவர் எடுத்த காரியத்தைச் சாதிப்பதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நீச்சல் வீரர்கள்



(நேற்றைய தொடர்ச்சி)

கரையில்லாமல் ஒரு நீர்நிலை உலகத்தில் இருக்க முடியாது. சரி, கடலை எங்களுக்குக் காட்டுங்கள் பார்க்கலாம் என்று வீரனும் சூரனும் கேட்டனர்.

ஊர்மக்கள் அவர்களைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றனர். கண்ணுக்கெட்டிய மட்டும் கரையே தென்படவில்லையே! இது தான் கடலா! என்று வியந்தான் வீரன்.

"அதற்கும் அப்பால் கரையிருக்கும்" என்று உறுதியான குரலில் கூறினான் சூரன்.

அப்பால் உள்ள கரைக்கு நீந்திச் சென்று திரும்பி வர உங்களால் முடியுமா?" என்று கேட்டான் தோற்றுப்போன இளைஞன்.

"எங்களால் முடியாதது எதுவும் இல்லை" என்று கூறிக்கொண்டே கடலில் குதித்து நீந்தினர் வீரனும் சூரனும்.

"வீரனே! சூரனே! வேண்டாம், வேண்டாம்! திரும்பிவிடுங்கள்!" என்று ஊர்ப்பெரியவர்கள் கூவியழைத்தனர். ஆனால் கூக்குரல்களையெல்லாம் அவர்கள் பொருட்படுத்தவேயில்லை.

அகன்று பரந்த கடலில் பச்சை அலைகளினிடையே அவர்கள் சிறிதும் அஞ்சாது நீந்திச் சென்றனர். எவ்வளவு நேரம் நீந்தியும் அவர்கள் மறு கரையைக் காணமுடியவில்லை. கரையில் நின்ற மக்கள் இனி அவர்கள் திரும்ப மாட்டார்கள் என்று எண்ணிக்கொண்டு கலைந்து சென்றுவிட்டார்கள்.

நெடுநேரம் நீந்திய பிறகு அவர்கள் கைகள் அலுத்துப் போயின. இனி என்ன செய்வதென்று வீரன் கலங்கினான். அப்போது அவ்வழியாக ஒரு மீன் பிடிக்கும் படகு வந்தது. வீரன் அதைக் கூவி அழைத்தான். படகில் இருந்தவர்கள், வீரன் வந்த பக்கம் படகைத் திருப்பி ஓட்டிவந்தார்கள்.

வீரன் படகில் ஏறிக் கொண்டான். அவர்களை வேண்டிக் கொண்டு சூரன் நீந்திவரும் பக்கமாகப் படகை ஓட்டச் சொன்னான்.

படகு சூரனை நெருங்கியதும், வந்து ஏறிக் கொள்ளும்படி வீரன் அவனைக் கூப்பிட்டான்.

அக்கரையைக் காணாமல் நான் திரும்ப மாட்டேன் என்று கூறிச் சூரன் மறுத்துவிட்டான்.

படகுக்காரர்கள் எவ்வளவோ கூறியும் சூரன் அவர்கள் சொல்லைக் கேட்கவில்லை. அவன் தன் போக்கில் நீந்திக் கொண்டே சென்றான். தங்கள் சொல்லை அவன் கேட்கவில்லை என்றதும் படகுக்காரர்கள் கரை நோக்கித் திரும்பினார்கள்.

சூரன் கையில் வலுவிருக்கும் வரை நீந்திக்கொண்டேயிருந்து கடைசியில் 'தண்ணீரில் மூழ்கி இறந்து போனான்.

படகில் திரும்பி வந்த வீரனைக் கடலில் அவ்வளவு தூரம் அஞ்சாமல் நீந்திச் சென்றதற்காக ஊர்மக்கள் பாராட்டிப் பேசினார்கள். திரும்பி வராமல் உயிர்விட்ட சூரனையோ அறிவில்லாதவன் என்று ஏசினார்கள். வீரன் தன் பரிசுப் பொருட்களுடன் வீடு திரும்பினான்.

கருத்துரை:-

துன்பப்படும் காலத்தில் கிடைக்கும் துணையை உதறித் தள்ளி விடக் கூடாது. (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> எதைச் செய்தாலும் தெளிவு, அறிவு மற்றும் அன்போடு செய்ய வேண்டும்.
>
> – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அப்பாவி மக்கள் இன்னமும் ஏமாற்றப்படுகின்றனர்

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்கிறார் வள்ளுவர்.

இங்கு மெய்ப்பொருளைக் காண்பதுதான் அறிவு என்பதை வள்ளுவர் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

நடைமுறை உலகம் அறிவியல் சார்ந்தது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் என்பதற்கு அப்பால், எவரையும் எவரும் ஏமாற்ற முடியாது எனும் அளவில் அறிவார்ந்த மக்கள் சமூகம் உருவாகியுள்ளது.

நிலைமை இதுவாக இருக்கின்ற போதிலும் நம் மக்கள் இன்னமும் ஏமாந்துபோவதுதான் மிகப்பெரும் வேதனை.

ஆம், தொலைபேசி அழைப்பை எடுத்து உங்களுக்கு பரிசுத்தொகை கிடைத்துள்ளது. உங்களுக்கு வெளிநாட்டில் இருந்து உதவித் தொகை வந்துள்ளது.

உங்களின் கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு பணப் பரிசு கிடைத்துள்ளது. இதனைப் பெற்றுக் கொள்வதற்குக் குறிப்பிட்ட தொகைப் பணத்தை குறிப்பிட்ட வங்கிக் கணக்கிலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள் எனக் கூற, அதனை அப்படியே நம்பிக் கொண்டு எவரிடமும் அதுபற்றி வினவாமல் – ஆராயாமல், கேட்ட பணத் தொகையை அனுப்பி வைக்கின்றனர்.

இதன் பின்னரே தாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்ற உண்மையை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்கிறார்கள்.

இதேபோல இலங்கை மத்திய வங்கியால் தடைசெய்யப்பட்ட பிரமிட் முறையிலான நிதி மோசடிகள் இன்னமும் நம் மண்ணில் நடந்தாகிறது.

ஆம், ஏழை மக்களை வரவழைத்து கூட்டங்களை நடத்தி நம்பக்கூடிய வகையில் பொய்ப்பிரசாரங்கள் செய்து பிரமிட் முறையிலான நிதிப் பரிமாற்றத்தை செய்கின்ற நிறுவனங்கள் ஏழை மக்களை ஏமாற்றி அவர்களைப் படுகுழியில் வீழ்த்தும் பாதகச் செயலைச் செய்கின்றன.

இவ்வாறு பல்வேறு யுக்திகளைப் பயன்படுத்தி நிதி மோசடிகள் நடந்தவண்ணமுள்ளன.

இத்தகைய மோசடிகள் குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளிவருகின்றபோதிலும் அது தொடர்பில் பொதுமக்கள் விழிப்படையாமல், தொடர்ந்தும் ஏமாறுகின்ற துர்ப்பாக்கிய நிலை நீடிக்கின்றது.

எனவே இது தொடர்பில் பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

அதிலும் எந்த உதவித் தொகை கிடைப்பதாக இருந்தாலும் அது அறிந்த, தெரிந்த அமைப்புகளிடமும் தனிநபர்களிடமும் இருந்து கிடைப்பதாக இருக்கட்டும்.

ஏனெனில் இனந்தெரியாதவர்கள் தருகின்ற உதவித் தொகைகள் கூட, வில்லங்கத்தை ஏற்படுத்தக்கூடியவை.

ஆகவே எதுஎவ்வாறாயினும் நிதானத்துடனும் ஆராய்ந்து அறிந்து செயற்படுவதிலும் நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

அதேநேரம் சமூகமட்ட அமைப்புகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் தமது பிரிவுகள் தோறும் மக்களுக்கு விழிப்பூட்டல் கருத்தரங்குகளை நடத்தி, அவர்களை உசார்ப்படுத்த வேண்டும்.

அப்போதுதான் அப்பாவி மக்கள் ஏமாந்து போகின்ற துயரம் முடிவுக்கு வரும்.

# அரிசித் தட்டுப்பாடு மீண்டும் ஏற்படாது!

## உறுதியளித்தார் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

மீண்டும் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்பட ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறை - கட்டுகுருந்த பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றக் கூட்டத்தில், கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மதிப்பிடப்பட்ட அரிசியை விட இரண்டு மடங்கு அரிசித் தொகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது தேவைக்கு அதிகமானளவு அரிசி உள்ளது. ஆகையால் மீண்டும் அரிசி தட்டுப்பாடு ஏற்பட ஒருபோதும் இடமளிக்க முடியாது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருமாயின் நாடு பின்னோக்கிச் செல்லும் எனப் பலர் கூறினார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் பாதுகாப்புக்காக வருடாந்தம் 700 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது.

தற்போது முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை 60 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

குறித்த பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையும் போதுமானது அல்ல எனக் கூறி வந்தால், அவர்களுக்கான மொத்த பாதுகாப்பும் நீக்கப்படும் எனவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் இந்திய நிறுவனத்திற்கு வழங்கப்படும்

### ஜனாதிபதி அநுர சுட்டிக்காட்டு

(களுத்துறை)

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் இந்திய நிறுவனத்திற்கு வழங்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலையில் காணப்படும் 99 எண்ணெய்த் தாங்கிகள் மூலம் நாட்டில் எரிபொருள் விநியோகம் செய்யத் தேவையில்லை.

உள்நாட்டு விநியோகத்திற்கு கொலன்னாவ, முத்து ராஜவெல எண்ணெய்த் தாங்கிகள் காணப்படுகின்றன.

இதனால் திருகோணமலையில் அதிகளவில் எண்ணெய்த் தாங்கிகள் உள்நாட்டு விநியோக நடவடிக்கைகளுக்கு அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, திருகோணமலையில் மேலதிகமாக காணப்படும் சுமார் 61 எண்ணெய்த் தாங்கிகளைப் பயன்படுத்தி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிர்மாணிப்பது குறித்து, இந்திய நிறுவனம் மற்றும் பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனம் என்பன பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி-8)

## அநுர அரசாங்கத்தில் இனவாதத்திற்கு இடமில்லை

### பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா

கடந்த ஆட்சியாளர்கள் தங்களின் தோல்வியின் விளிம்பில் எடுக்கும் ஆயுதம் இனவாதம். எமது அரசாங்கத்தில் ஒரு காலமும் இனவாதத்தை கையில் எடுக்கப் போவதில்லை எனப் பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதியமைச்சர், எமக்கு எந்தவித பாதிப்புகள் வந்தாலும் நாம் ஒரு காலமும் இனவாதத்தைக் கையில் எடுக்கப் போவதில்லை என்ற உத்தரவாதத்தை நான் உங்களுக்கு தருகின்றேன்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தில் அரசியல் நெருக்கடி மாற்றப்பட்டுள்ளது. இருப்பினும்பொருளாதார நெருக்கடி சமூக நெருக்கடிகள் காணப்படுகின்றன. இவற்றைநாம்வேகமாக மாற்றியமைக்க வேண்டிய தேவை உள்ளது.

நாம் நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள்ளது. சமூக மாற்றத்தின் பிரதான பங்கினை இலக்கிய வாதிகள் வகிக்கின்றனர்.

எமக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் பலமானது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அரசியல் முரண்பாடுகளானது தேர்தல் நிறைவடைந்த பின் அவை கைவிடப்பட வேண்டும்.

மக்களுக்காக நாம் இன, மத, மொழி வேறுபாடின்றி ஒன்றிணைய வேண்டும் இதனை மாற்றியமைத்து நாம் சரியான திசைக்கு மக்களை வழிநடத்த வேண்டிய இடத்தில் இருக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

## பொதுச் சுகாதார ■ ■ ■ ■ ■ பரிசோதகர்களுக்கு பற்றாக்குறை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி சுமார் 1000 பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு பற்றாக் குறை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது ஆட்சேர்ப்பு முயற்சிகள் நடைபெற்று வருகின்ற போதிலும் ஆளணித் தட்டுப்பாடு குறிப்பிடத்தக்க பிரச்சினையாகவே உள்ளது என அதன் செயலாளர் சமில் முத்துக்குடா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இதை நிவர்த்தி செய்யும் வகையில் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் கிட்டத்தட்ட 300 புதிய நியமனங்கள் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தம் வரவேற்ற இலங்கை

(கொழும்பு)

இஸ்ரேலுக்கும் ஹமாஸ்க்கும் இடையில் 15 மாதங்களாக நீடித்து வந்த மோதலுக்கு முற்றுப்புள்ளி வைத்த போர்நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை வரவேற்றுள்ளது.

இது குறித்து ஒரு அறிக்கையில் வெளிவிகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளதாவது,

"பணயக்கைதிகள் மற்றும் கைதிகளை பரிமாறிக் கொள்வதற்கும் [illegible] [illegible] களை காசாவில் அவர்கள் வசிக்கும் இடங்களுக்குத் திரும்புவதற்கும், காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் வழி வகுக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம் நிலைத்திருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்."

"இந்த முன்னேற்றங்கள் பாலஸ்தீனம் மற்றும் பிராந்தியத்தில் நிலையான, அமைதியை ஸ்தாபிப்பதற்கு பங்களிக்கும் என்பதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளது. (நி-8)

## சேரு நுவர பகுதியில் சொகுசு பேருந்து விபத்து

### 14 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பயணிகள் சொகுசு பேருந்து ஒன்று சேருநுவர கந்தளாய் வீதியில் சேருநுவர இராணுவ முகாமிற்கு முன்பாக விபத்துக்குள்ளாகியுள்ளது.

மழை காரணமாக குறித்த பேருந்து வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதுண்டு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இந்த விபத்து நேற்று நள்ளிரவு 12.05 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன், அப்போது பேருந்தில் சுமார் 49 பயணிகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் குறித்த பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் உட்பட 14 பேர் காயமடைந்து சேருநுவர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 9 பேர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் - பகுதி - II

## 03

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

2020 ஆம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 15578 பேர். 2018 ஆம் ஆண்டு நகர சபைத் தேர்தலுக்குப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 12 490 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன (SLPP), ஐக்கிய சோசலிச கட்சி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி (TCDP) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

ணிக்கை - 11 ஆகும். காரைநகர் பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 22.18 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டு சனத்தொகை கிட்டத்தட்ட 10190 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 8170 ஆகும். இத் தேர்தலில் ஒருவர் மேன்மிகை உறுப்பினராகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), சுயேட்சை குழு (IND),

### சாவகச்சேரி நகர சபைத் தேர்தல் – 2018
### கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | சாவகச்சேரி நகர சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 11 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 11 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 18 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 2,779 | 31.39% | 6 | 6 | - | - |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 2,481 | 28.02% | 5 | 3 | 2 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,372 | 15.50% | 3 | 1 | 2 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,029 | 11.62% | 2 | 1 | 1 | - |
| தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி | 518 | 5.85% | 1 | - | 1 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 344 | 3.89% | 1 | - | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 261 | 2.95% | - | - | - | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 60 | 0.68% | - | - | - | - |
| ஐக்கிய சோசலிச கட்சி | 10 | 0.11% | - | - | - | - |
| மொத்தம் | 8,854 | 100% | 18 | 11 | 7 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 8,854 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 121 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 8,975 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 12,490 |

### சாவகச்சேரி நகர சபைத் தேர்தல் – 2018

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | கல்வயல் | J 305 | SLFP | 272 |
| 2 | சாவகச்சேரி வடக்கு | J 303 | TC | 195 |
| 3 | மண்டுவில் | J 304 | ITAK | 184 |
| 4 | மீசாலை மேற்கு | J 319 | ITAK | 486 |
| 5 | மீசாலை கிழக்கு | J 318 | TC | 406 |
| 6 | சங்கத்தானை | J 302 | TC | 388 |
| 7 | சாவகச்சேரி நகரம் | J 300 | TC | 218 |
| 8 | நுணாவில் கிழக்கு- மத்திய | J 306, J307 | TC | 369 |
| 9 | நுணாவில் மேற்கு | J 308 | EPDP | 316 |
| 10 | கோயில் குடியிருப்பு - கடல் | J 301ன் கடல் பகுதி | TC | 257 |
| 11 | கோயில் குடியிருப்பு - ஏ | J 301ன் தரைப்பகுதி | TC | 191 |

### 05.காரைநகர் பிரதேச சபை

காரைநகர் பிரதேச சபையில் மொத்தமாக 9 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ள டக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 6 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட் டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய் யப்படும் உறுப்பினர்கள் எண்

தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன (SLPP) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

### 06.ஊர்காவற்றுறை பிரதேச சபை

ஊர்காவற்றுறை பிரதேச சபை யில் மொத்தமாக 15 கிராம அலு

### காரைநகர் பிரதேச சபைத் தேர்தல் – 2018
### கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | காரைநகர் பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 6 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 6 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 11 (மேன்மிகை உறுப்பினர்கள் உட்பட) |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 1,623 | 27.84% | 3 | 3 | - | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,263 | 21.67% | 2 | - | 2 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,197 | 20.54% | 2 | - | 2 | - |
| சுயேச்சைக் குழு | 1,080 | 18.53% | 2 | 3 | - | 1 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 359 | 6.16% | 1 | - | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 156 | 2.68% | - | - | - | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 136 | 2.33% | - | - | - | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 15 | 0.26% | - | - | - | - |
| மொத்தம் | 5,829 | 100% | 10 | 6 | 5 | 1 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 5,829 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 76 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 5,905 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 8,170 |

### காரைநகர் பிரதேச சபைத் தேர்தல் – 2018

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | தங்கோடை | J 40, J 41 | ITAK | 314 |
| 2 | ஆலடி | J 46, J 48 | ITAK | 479 |
| 3 | வலந்தலை | J 47 | ITAK | 328 |
| 4 | களபூமி | J 42, J43 | IND | 356 |
| 5 | வியாவில் | J 45(தீவுகளும் உள்ளடங்கும்) | IND | 263 |
| 6 | துறைமுகம் | J 44 | IND | 275 |

வலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 8 வட்டாரங்களாகப் பிரிக் கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய் யப்படும் உறுப்பினர்கள் எண்

கிட்டத்தட்ட 10509 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத்தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 7279 ஆகும். இத்தேர் தலில் அகில இலங்கை தமிழ்க் காங் கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அர சுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசி

### ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தேர்தல் – 2018
### கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | ஊர்காவற்றுறை பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 8 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 8 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 13 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 2,884 | 51.02% | 7 | 6 | 1 | - |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 1,982 | 35.06% | 5 | 1 | 4 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 548 | 9.69% | 1 | 1 | - | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 142 | 2.51% | - | - | - | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 45 | 0.80% | - | - | - | - |
| சோசலிச சமத்துவக் கட்சி | 44 | 0.78% | - | - | - | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 8 | 0.14% | - | - | - | - |
| மொத்தம் | 5,653 | 100% | 13 | 8 | 5 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 5,653 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 53 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 5,706 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 7,279 |

ணிக்கை - 8 ஆகும்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை யின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 30.54 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020 ஆம் ஆண்டுச் சனத் தொகை

யக் கட்சி (UNP), சோசலிச சமத்துவக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சி (SLFP) ஆகியன போட்டி யிட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் பெண்...

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த புகையிரதத்தில் குறித்த பெண் மோதி உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண் மன்னார் ஜீவபுரம் பகுதியில் வசித்து வந்துள்ள நிலையில் வெள்ளம் காரணமாக தற்காலிகமாக தோட்டக்காட்டில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-7,285)

## 108 கிலோ...

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் 108 கிலோ கேரளக் கஞ்சாவுடன் 4 பேர் நேற்று யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குருநகரைச் சேர்ந்த இருவர் மற்றும் பூநகரி, மன்னாரைச் சேர்ந்த தலா ஒருவர் என நால்வர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேகநபர்களையும் கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவையும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

## பாராளுமன்றம்...

பட்டுள்ளது.

நாளை காலை 9.30 முதல் காலை 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மகிந்த வசிக்கும்...

துக்கு மாத்திரம் 46 இலட்சம் ரூபாய் வாடகை செலுத்தப்பட வேண்டும் என அரச மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது. இன்னமும் அந்த வீடு அமைந்துள்ள காணி தொடர்பிலான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆட்சியாளர்கள் இவ்வாறுதான் மக்கள் பணத்தை நாசமாக்குகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகள் குறித்த சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கு வீடொன்றை வழங்க முடியும். இல்லாவிட்டால் சம்பளத்தில் மூன்றில் ஒருபகுதி உரித்தாகும். அதனால் அவரிடம் வீட்டைப் பெற்றுவிட்டு சம்பளத்தில் மூன்றில் ஒருபகுதியான 30ஆயிரம் ரூபாவை வழங்குவோம். இல்லாவிட்டால் மீதிப் பணத்தைச் செலுத்தி குறித்த வீட்டில் வாடகைக்கு இருக்க அனுமதியளிக்கப்படும்.

சந்திரிகாவின் வீடு குறித்தும் மதிப்பீடு செய்யப்படும். அவர் லண்டனில் இருந்தார். தற்போது நாடு திரும்பியுள்ளதால் மதிப்பீடு செய்யப்படும்.

அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை எமது அரசில் எவருக்கும் வழங்கமாட்டோம். அந்த வீடுகளுக்கு என்ன செய்வது என்பது தொடர்பில் ஆய்வை நடத்துமாறு கோரியுள்ளோம். அதன் பிரகாரம் அவை குறித்து உரிய தீர்மானங்கள் எடுக்கப்படும். முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் வீடுகளை வழங்கமாட்டோம். நானும் பெறமாட்டேன் என்றார். (ம-7)

## இந்தியாவுடன்...

ஹொரணையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலக பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது. அதனால் உலக நாடுகளுடன் பலமான இராஜதந்திர உறவுகளை நாம் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.

இந்தியா எமக்கு அருகில் உள்ள வளர்ந்துவரும் பலமான பொருளாதாரம் கொண்ட நாடு. அதனால் இந்தியாவுடன் நாம் பலமான இராஜதந்திர உறவைப் பேண வேண்டும். அதனை நாம் செய்துள்ளோம்.

சம்பூரில் இந்திய நிறுவனத்துடன் இணைந்து சூரிய ஒளி மின்சாரத்தைத் தயாரிக்க இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இதன் உரிமம் இரு தரப்பினருக்கும் 50 வீதம் என்ற அடிப்படையில் கிடைக்கும். மின்சார அலகொன்று 0.59 டொலருக்கு எமக்கு கிடைக்கும். இதற்கான அமைச்சரவை அனுமதி விரைவில் அளிக்கப்படும் என்றார். (ம-7)

## யானை...

அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த மூன்று பெண் பணியாளர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் தெற்கு கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட வேம்படிச் சந்தியிலிருந்து வெலி ஓயா செல்லும் காட்டுப் பகுதிக்குள் கண்ணிவெடிப் பிரிவைச் சேர்ந்த 10 பேர் கொண்ட குழு வேலை செய்து கொண்டு இருந்துள்ளது. குறித்த பகுதியில் திடீரென யானை ஒன்று வந்து துரத்தியுள்ளது.

யானை துரத்தியதைக் கண்டவுடன் பயத்தில் பணியாளர்கள் ஓடியுள்ளனர். அதன்போது 3 பெண் பணியாளர்கள் காயமடைந்துள்ளார்கள்.

காயமடைந்த மூவரும் மீட்கப்பட்டு முல்லைத்தீவுமாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,299)

## மகிந்தவை...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே காரியவசம் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியல் ஆதாயங்களைப் பெறுவதற்காக நாட்டைக் காப்பாற்றிய தலைவரின் பாதுகாப்பை நீக்கவோ அல்லது விஜேராமாவின் வீட்டிலிருந்து அவரை அகற்றவோ மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியையும் வெறுப்புடன் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு குறித்த விடயங்கள் யாருடையநலனுக்காகச் செயற்படுத்தப்படுகிறது என்பதையும் உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் என்றும் சாகர காரியவசம் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இல்லத்திற்கு வாடகையாக ரூ. 4.6 மில்லியன் செலுத்த வேண்டும் அல்லது அதை விட்டு வெளியேற வேண்டும் என ஜனாதிபதி அநுர குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான தொரு பின்னணியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் இந்தக்கருத்துக்கு மகிந்த ஆதரவு தரப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கட்டுநாயக்க...

தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரண்டு சந்தேகநபர்களும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட "குஷ்" போதைப் பொருளின் பெறுமதி 60 மில்லியன் ரூபாய்க்கும் அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## 20 நாட்களில்...

24 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.01.20
சீட்டிழுப்பு இலக்கம் 5722
G 2 1 9 1 0 1
அத சம்பத
G 9 1 0 1
சீட்டிழுப்பு இலக்கம் 297
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1752
V 19 31 40 68 V
Double Chance 62887

மெகா பவர்
திகதி 20/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2070
J 05 20 21 33 68

லக்கி 7 VIP
திகதி 2025.01.20
சீட்டிழுப்பு இலக்கம் 548
L 4 3 1 2 9 6 L

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3964
சீட்டிழுப்பு திகதி 20.01.2025
A 03 18 36 68
A
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.20
சீட்டிழுப்பு இலக்கம் 1031
கன்னி 07 08 31 61 கன்னி
79072 11

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.01.2025 வெற்றி வாரம் 430
G 2 4 8 4 4 5
63665
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,498,352.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2696
சீட்டிழுப்பு திகதி 2025.01.20 தினம் திங்கட்கிழமை
09 35 49 72 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,062,119.20

சனிதா
திகதி 20.01.2025 வெற்றி வாரம் 4857
06 13 30 74 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,459,442.00
89124

ஜயோதா Jayoda
திகதி 2025.01.20 வெற்றி வாரம் 2096
15 16 17 64 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,401,570.80

சீட்டிழுப்பு வாரம் 4408
சீட்டிழுப்பு திகதி 20.01.2025 தினம் திங்கட்கிழமை
04 41 51 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,709,684.40
262955

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 27 18 36 66 75
1872
20.01.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.562,507,580.40

திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2522
சீட்டிழுப்பு திகதி: 2025.01.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,397,178.40
ADA KOTIPATHI
22 25 27 64 U
650285


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2095)

076 825 7716 (ஆகாஸ்)



## மாப்பிள்ளை தேவை

1. மீசாலை - புலோலி, இந்து, 1993, அவிட்டம், BSc Software Engineer, Singapore பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
2. புலோலி - சாவகச்சேரி, இந்து, 1990, பூசம், MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
3. பருத்தித்துறை - கச்சேரியடி, இந்து, 1978, உத்திரட்டாதி, BA, Canada Citizen, widower பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
4. கைதடி - அச்சுவேலி, இந்து, 1989, மூலம், MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
5. புலோலி - கரவெட்டி, இந்து, 1994, திருவாதிரை, Ass. Accountant, Canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
6. வட்டுக்கோட்டை, இந்து, 1984, புனர்பூசம், Business Management, Divorce, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
7. காரைநகர் - அளவெட்டி, இந்து, 1987, ஆயிலியம், Master of Education, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
8. வேலணை, இந்து, 1990, ரேவதி, Graduate, Researcher, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
9. இணுவில், இந்து, 1995, கார்த்திகை, Bank officer, Norway பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
10. உரும்பிராய், இந்து, 1993, MSc canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

(C-2099)

S.Sharma J.P
www.thaalee.com
- 077 539 3728
- 077 803 8193


# பேருந்தில் திருட்டு

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாடசாலை சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தில் இருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவமொன்று யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்றது.

பருத்தித்துறையில் உள்ள காங்கேசன்துறை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த பேருந்தின் கண்ணாடி கழற்றப்பட்டே கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டதாக தெரிவிக்கப்படும் நிலையில் பேருந்து உரிமையாளரால் பருத்தித்துறை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7,33)


## விற்பனைக்கு

மலிவு விலையில்
வன்னி உழுந்து
1 கிலோ 600/=
25 கிலோவுக்கு மேல்
கொள்வனவுக்கு
கொண்டுவந்து தரப்படும்.
077 305 1927
(3075)



## கட்டடம் வாடகைக்கு

சங்கானை அபான்ஸ் கம்பனிக்கு
மேல் உள்ள தளம் வாடகைக்கு
உண்டு. நிறுவனங்கள்
விரும்பத்தக்கது
மற்றும் காணிகள், வீடுகள்,
வியாபார நிலையங்கள்
விற்பதற்கும், வாங்குவதற்கும்
நம்பிக்கையான இடம்.

"Easy Real Estate"

076 742 4301, 075 710 9639
Whatsapp : +94757109639
Viber : +94719646619
(3076)



## ENGLISH LITERATURE

By : P.MATHAN
B.A(Eng.Lit), Dip.in Eng
077 792 3653
18/18, Wyman Road, Nallur.
(3064)



## யோக்கட் கொள்வனவுகள்

பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம்.
48/= ~~80/=~~
Happy Supermarket
உரும்பிராய்
+94 76 800 65 00
(764)



## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :
075 033 6759
(531)



## V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2094)


# மரண அறிவித்தல்

மலர்வு
19 - 09 - 1953



உதிர்வு
19 - 01 - 2025

## திருமதி யோகேஸ்வரி அருணகிரிநாதன்

வேலணை மேற்கு, 8ம் வட்டாரம், முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் 40, நாயன்மார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி அருணகிரிநாதன் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை (19.01.2025) அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் வேலணை மேற்கு காலஞ்சென்ற இராசரத்தினம் - அன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகளும் பொன்னம்பலம் அருணகிரிநாதன் (முன்னாள் அதிபர், வேலணை மத்திய கல்லூரி, ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர், தீவகம், யாழ்.வலயம்) அவர்களின் அன்பு மனைவியும் நிருஷா (web designer - அவுஸ்திரேலியா), அருண்ராஜ் (ஆசிரியர் - வேலணை மத்திய கல்லூரி), கார்த்திகா (ஆசிரியர் - புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் குருபரன் (Quantity Surveyoring - அவுஸ்திரேலியா), கிருஷாந்தி (ஆராய்ச்சி உதவியாளர், பனை ஆராய்ச்சி நிறுவனம்), ஏகாந்தன் (உதவிச் செயலாளர், ஆளுநர் செயலகம் - வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அதித்தி, அதிரா, ஆதித்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சகுந்தலாதேவி, சதானந்தன், சண்முகானந்தன், தயானந்தன், கிருபானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமநாதன், சிவநாயகி, சுகந்தா, உதயசந்திரிக்கா, அனுசியா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2025) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.40, நாயன்மார் வீதி,
நல்லூர். (C-2096)

077 346 6589
077 412 9584

அன்னாரின் பிரிவால்
துயருறும்: குடும்பத்தினர்


## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் பிரபல உணவகம் ஒன்றிற்கு
வேலையாட்கள் தேவை.

- சமையலாளர்
- பார்சல் கட்டுபவர்
- கொத்து போடுபவர், றைஸ் போடுபவர்
- உணவு பரிமாறுபவர்

தொடர்பு : 077 40 78 235
(763)



## MARD

கோப்பாய், மருதனார்மட கிளைகளில்
இதே விலைகளில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs. 389.00 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 979.00 Max 1 PCS Anchor 400g | Rs. 289.00 Bulk ரவை | Rs. 49.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1749.00 Max 1 PCS ~~2100~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2499.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 339.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1190~~ Anchor Plus |
| Rs. 139.00 ~~175~~ Santoor Soap | Rs. 399.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 349.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3349.00 Max 1 PCS ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |
| Rs. 199.00 ~~270~~ Fems 10 Pcs Pads | Rs. 799.00 ~~1200~~ Marvel 16 Pcs | Rs. 459.00 ~~698~~ Cute Baby Wipes | Rs. 2699.00 ~~3000~~ Vijitha 10Kg |

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)
074 2327 545

மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)
074 1011 345
(C-2097)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org